# தமிழ்நாட்டில் மின்வெட்டு - செயலிழந்த விஜய் அரசு!

## ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு கடும் விமர்சனம்!

**சென்னை, செப். 20-**

**த.வெ.க. ஆட்சிக்கு வந்த 4 மாதங்களில் தமிழ்நாட்டில் அறிவிக்கப்படாத மின்வெட்டு இல்லாத பகுதியே இல்லை என்று கூறும் அளவுக்கு அரசு நிர்வாகத்தில் சுணக்கம் ஏற்பட்டுள்ளதாக Times of india குற்றம் சாட்டியுள்ளது.**

த.வெ.க. ஆட்சியில் தமிழ்நாட்டில் நிலவும் வரலாறு காணாத மின்வெட்டால் நாள்தோறும் மக்கள் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்துவது தொடர் கதையாகி வருகிறது. இந்நிலையில், மின்வெட்டு குறித்து Times of india ஆங்கில நாளிதழ் விரிவாக செய்தி வெளியிட்டுள்ளது.

அதில், கடந்த காலங்களில் உச்சகட்ட கோடைக்காலத்தில்கூட, மின்வெட்டு பிரச்சனை இருந்ததில்லை. ஆனால், இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்திலேயே கடுமையாக மின்வெட்டால் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாக கூறப்பட்டுள்ளது. த.வெ.க. ஆட்சிக்கு வந்த 4 மாதங்களில் தமிழ்நாட்டில் அறிவிக்கப்படாத மின்வெட்டு இல்லாத பகுதியே இல்லை என்று கூறும் அளவுக்கு அரசு நிர்வாகத்தில் சுணக்கம் ஏற்பட்டுள்ளதாக Times of india குற்றம் சாட்டியுள்ளது.



...plaint Mechanism, Power Generation Deficit, Overstretched Distribution Network Cause Frequent Power Cuts

**NO POWER, NOWHERE TO GO**

Venkadesan.S@timesofindia.com

Hundreds of people taking to the streets to vent frustration over frequent and long power cuts, particularly at night, was unheard of even in the peak summer months in previous years. Yet, it has become the order of the day in Sept this year.

Hardly any neighbourhood is spared. Residents of Washermenpet and Royapuram were the latest to join the protests. On Thursday night, they thronged the local section offices and quarrelled with officers. The problem lies in both generation and distribution. Making matters worse, the grievance redress mechanism has collapsed, meaning consumers are suffering on all three crucial aspects.

**GENERATION FUMBLES**

The extended summer caught the TN Power Distribution Corporation (TNPDCL) off guard. The unprecedented surge in power demand, limited generation from the state's own plants, and indecisiveness over alternative arrangements led to the sorry state of affairs in the state. While releasing the white paper on the energy department in July, electricity minister R Nirmalkumar said previous govt bought 'high-cost' power through short-term agreements. Two months later, TNPDCL has now again opted for short-term agreements and purchases from exchanges.

S Neelakanta Pillai, a retired TNEB engineer, said the thermal plants were generating power well below their installed capacity. "The 800MW thermal plant NCTPS Stage III has been producing power to extent of 46%, whereas both the 600MW units of Stage II are also generating power at 42% and 46%."

TN power generation corporation officials said some plants could not achieve full potential as they were due for annual maintenance. "They still generate power to tide over the crisis. The maintenance is necessary to ensure their availability next summer," said the official.

**DISTRIBUTION GLITCHES**

The constant excuse given for power cuts in Chennai and suburbs is failure of distribution network, including damage to underground cables and tripping of feeders.

Poor coordination of NPDCL officials with contractors of other agencies such as MAWS and GCC, despite multiple interagency meetings, also led to outages in several pockets. TNPDCL recently lodged a police complaint against Torrent Gas for damaging an underground cable, which left Avadi and Pattabiram residents in darkness. Nirmalkumar on Friday said the officers had been directed to lodge police complaints against agencies that damage TNPDCL properties.

**COMPLAINT MECHANISM DEFUNCT**

Minnagam is the centralised call centre set up to receive electricity-related complaints from across the state via the dedicated phone number 94987-94987. But it often falls dead, making it impossible for consumers to report grievances.

Minnagam is equipped to take at least 60 calls at a time and forward the complaints to the section concerned for quick redressal.

The recently revived 'Fuse Off Call' system for each assistant engineer's office also failed to bridge the gap, as all numbers had to be replaced after a dispute with the telecom provider.

"TNPDCL has not publicised the new numbers. It should have sent an SMS to all consumers about the change. At least, rerouting calls to the new numbers would have helped consumers," said Satish Galley of Semmanchery. T Sadagopan of Pattabiram, a consumer activist, said, "TNPDCL's WhatsApp chatbot is still at a nascent stage and does not respond well."

However, minister Nirmalkumar said the power crisis in Tamil Nadu is well under control compared to states such as Punjab, where outages last up to 14 hours. "For consumer grievance redressal, we are developing an advanced AI tool, and it will be launched in two months," he said.

**BLOW A FUSE**

WIDESPREAD OUTRAGE: Residents of Moorthingar Street in Vyasarpadi hold a road blockade on Friday, protesting against daily power cuts

**STEPS TAKEN**

> TNPDCL is procuring 2,000MW through short-term power purchases, while another 1,500 MW is also in the pipeline

> Talks are underway with the Union power ministry to increase TN's share from central stations

**CONSUMER COMPLAINT MECHANISM IN A SHAMBLES**

> Minnagam helpline, which gets up to 4,500 calls a day, goes off the grid due to glitches

> Consumers are not made aware of Fuse Off Calls contact numbers to report power cuts.

> WhatsApp chatbot is not responsive to complaints

> Complaints made via TNPDCL apps are not attended to

NO RESPONSE: Minnagam complaint centre

மின் நிலையங்களில் குறைவான உற்பத்தி மற்றும் மாற்று ஏற்பாடுகள் குறித்து முடிவெடுப்பதில் நிலவிய தயக்கம் ஆகியவையே மின்தடைக்கான மோசமான நிலையை உருவாக்கியுள்ளன. தமிழ்நாடு மின்வாரியத்துக்கு சொந்தமான அனல்மின்நிலையங்களில் மிகக் குறைந்த அளவிலேயே மின்சாரத்தை உற்பத்தி செய்து வருகிறது என்றும் Times of india குறிப்பிட்டுள்ளது.

மின்தடை குறித்து புகார்களை தெரிவிப்பதற்கான மின்னகம் அழைப்பு மையம் அடிக்கடி செயல்படாமல் போவதாகவும் Times of india விமர்சித்துள்ளது.

ஒவ்வொரு உதவிப் பொறியாளர் அலுவலகத்திற்கும் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்ட Fuse Off Call முறையும் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை; தொலைத்தொடர்பு நிறுவனத்துடனான கருத்து வேறுபாடு காரணமாக அனைத்து எண்களும் மாற்றப்பட வேண்டிய சூழல் ஏற்பட்டது. இதனால், புதிய எண்கள் குறித்த விவரங்கள் நுகர்வோருக்குத் தெரியாமல் போய்விட்டன.

இந்த மாற்றம் குறித்து அனைத்து நுகர்வோருக்கு மின்வாரியம் குறுஞ்செய்தியை கூட தமிழ்நாடு மின்வாரியம் அனுப்பவில்லை என்று Times of india குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தத்தில் மின்தட்டுப்பாட்டை போக்க எந்த உருப்படியான நடவடிக்கையையும் எடுக்காமல் முந்தைய அரசு மீது குறை கூறி, சாக்குபோக்கு சொல்லியே த.வெ.க. அரசு பொழுதை கழித்து வருவதாக Times of india ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ள சிறப்புச் செய்தியில் கடுமையாக விமர்சித்துள்ளது.

### உருப்படியான நடவடிக்கை இல்லை!

**ஒட்டுமொத்தத்தில் மின்தட்டுப்பாட்டைப் போக்க எந்த உருப்படியான நடவடிக்கையையும் எடுக்காமல் முந்தைய அரசு மீது குறை கூறி, சாக்குபோக்கு சொல்லியே த.வெ.க. அரசு பொழுதை கழித்து வருவதாக Times of india ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ள சிறப்புச் செய்தியில் கடுமையாக விமர்சித்துள்ளது.**

# மாநிலம் முழுவதும் மின்தடை - மக்கள் திணறல்!

## ‘தினமலர்’ கடும் விமர்சனம்!

**சென்னை, செப். 20-**

**தமிழகம் முழுதும் காலை, மதியம், இரவு என, மின் தடை செய்யப்படுகிறது. இதனால் ஏற்படும் பாதிப்பை சமாளிக்க முடியாமல் மக்கள் திணறி வருகின்றனர். இந்த பிரச்சினையில், தமிழக அரசு தலையிட்டு, அவசரகால நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே, மக்களின் குமுறலாக உள்ளது என்று தினமலர் நாளேடு (19.9.2026) செய்தி வெளியிட்டுள்ளது.**

இதுகுறித்து தினமலர் நாளேடு வெளியிட்டுள்ள செய்தி வருமாறு:-



**திணறல்!**

- மாநிலம் முழுதும் மின் தடையால் மக்கள்...
- அவசரகால நடவடிக்கை தேவை என குமுறல்

மின் தடை ஏன்: அமைச்சர் நிர்மல்குமார் விளக்கம்

தமிழகத்தில் கோடை காலம் முடிந்தும், இன்னும் வெயில் கடுமையாக உள்ளது. தினசரி மின் தேவை சராசரியாக, 20 ஆயிரம் முதல் 21 ஆயிரம் மெகா வாட்டாக உள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே காலத்தில், 16 ஆயிரம் மெகா வாட்டாக இருந்தது.

காற்றாலை மின் நிலையங்களில் இருந்து, மே முதல் கடந்த மாதம் வரை தினமும் சராசரியாக 4 ஆயிரம் மெகா வாட் மின்சாரம் கிடைத்து வந்தது; இம் மாதத்தில் அது பாதியாக குறைந்துள்ளது.

இதனால், தினசரி 1,500 முதல் 2,000 மெகா வாட் மின் பற்றாக்குறை ஏற்பட்டதால், கடந்த வாரத்தில் சென்னையை தவிர்த்து, மற்ற மாவட்டங்களில் அறிவிக்கப்படாமல், ஒரு மணி நேர மின் வெட்டு செய்யப்பட்டது.

பற்றாக்குறையை சமாளிக்க மின்சார சந்தையில், 3,500 மெகா வாட் மின்சாரத்தை, மின் வாரியம் கொள்முதல் செய்தது. தற்போது, தினசரி மின் தேவை 20 ஆயிரம் மெகா வாட்டாக உள்ளது.

சென்னையில் மின் தேவை அதிகரிப்பால், பல இடங்களில் டிரான்ஸ் பார்மர் உள்ளிட்ட மின் வினியோக சாதனங்கள், 'ஓவர்லோடு' காரணமாக பழுதாகி வருவதால், மின் தடை ஏற்பட்டு வருகிறது.

வண்ணாரப் பேட்டை, மார்டன் லேன், லாலா குண்டா கண்ணன் தெரு, தர்மராஜன் கோவில் தெரு, விஜயராமலு தெரு, காளிங்கராயன் தெரு உள்ளிட்ட தெருக் களில், 10 ஆயிரத்துக் கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர்.

இப்பகுதியில், ஒரு வாரமாக மின் தடை ஏற்பட்டு வருகிறது. வழக்கம் போல, நேற்று முன் தினம் நள்ளிரவு 12:00 மணிக்கும் மின் தடை ஏற்பட்டது. தொடர் மின் தடையால் ஆத்திரம் அடைந்த, 100க்கும் மேற்பட்ட மக்கள், வண்ணார ப்பேட்டை, கண்ணன் ரவுண்டானா அருகே மறியலில் ஈடுபட்டனர்.

**இராயபுரம் எம்.எல்.ஏ. முற்றுகை!**

அப்போது, ராயபுரம் எம்.எல்.ஏ., விஜய் தாமுவை கண்டித்து, கோஷம் எழுப்பினர். தொடர்ந்து பழைய சிறைச் சாலையில் உள்ள துணை மின் நிலைய அலுவலகத்தை சாலை முற்றுகையிட்டனர்.

அங்கு, இரவு பணியில் இருந்த மின் வாரிய பணியாளர்களிடம் கேள்வி எழுப்பினர். போலீசார் பேச்சு நடத்தி, கலைந்து போக செய்தனர்.

வியாசர்பாடி, மூர்த்திங்கர் இரண்டாவது தெரு, தேசிங்கபுரம், சுந்தரபுரம் பவர் லைன், எம்.எம்.கார்டனில், கடந்த நான்கு நாட்களாக அடிக்கடி மின் தடை ஏற்பட்டு வந்துள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள், மூர்த்திங் கர் இரண்டாவது தெரு சந்திப்பில், எருக்கஞ்சேரி பிரதான சாலையில் நேற்று முன்தினம் மாலை 3:00 மணியளவில் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். போலீசார் மற்றும் மின் வாரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதாக கூறி, அனைவரையும் கலைந்து போகச் செய்தனர்.

கெல்லீஸ் கீழ்ப்பாக்கம், ‘சிக்னல்’ அருகே, சுற்று வட்டார பகுதி மக்கள் 20க்கும் மேற்பட்டோர், மின் தடையை கண்டித்து, புரசைவாக்கம் மின் வாரிய அலுவலகத்தை நேற்று முன்தினம் நள்ளிரவு முற்றுகை யிட்டனர்.

இதுகுறித்து, பாதிக்கப்பட்டவர்கள் கூறிய தாவது:

வழக்கமாக, இரவில் தான் மின் தடை ஏற் படும். ஆனால், சமீப காலமாக பகல், இரவு, நள்ளிரவு, அதிகாலை என, இஷ்டத்திற்கு மின் தடை ஏற்படுகிறது. அனல் காற்று வீசுவதால், வீடுகளில் மின்சாரம் இல்லாமல் இருக்க முடிவதில்லை.

இதுதொடர்பாக புகார் அளிக்க, மின்னகம் நுகர்வோர் சேவை மையத்தை தொடர்பு கொண்டாலும் இணைப்பு கிடைப்பதில்லை. உதவி பொறியாளர்களிடம் புகார் அளிக்க தொடர்பு கொண்டால், அவர்களின் மொபைல் போன் எண் மாறியுள்ளது.

மின்தடையால் சிரமம் புகார் ஏற்படுவதுடன், கூற முடியாத நிலையும் ஏற்படுவதால், மன உளைச்சல் ஏற்படுகிறது. எனவே, மின்வினியோக பிரச்னையில், அரசு தலையிட்டு தீர்வு காண வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

### மடை மாற்றும் பல கட்சித் தாவல்

### ‘சங்கி’ அமைச்சர்!

## பேரறிஞர் அண்ணாவின் 118-வது பிறந்த நாள் விழா:

# காரைக்குடியில் அண்ணா உருவச் சிலைக்கு மாலையணிவிப்பு!

## அண்ணா தமிழ்க் கழகம் சார்பில் மரியாதை!

காரைக்குடி, செப். 20-

பேரறிஞர் அண்ணாவின் 118வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அண்ணா தமிழ்க் கழகம் சார்பில் அண்ணா உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன், காரைக்குடி மேயர் நா. குணசேகரன் ஆகியோர் முன்னிலையில் அண்ணா தமிழ்க் கழகத் தலைவர் வே. பொன்னுதுரை அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் அண்ணா தமிழ்க் கழக செயலாளர் அ. கதிர்வேல், நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்களின் தலைமையை ஏற்று தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் முன்னிலையில் தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி சட்டமன்றத் தொகுதி கீழப்பாவூர் ஒன்றியம் அதிசயபுரம்அ.ம.மு.க.செயலாளர் ஜோதிமணி அக்கட்சியில் இருந்து விலகி கழகத்தில் தன்னை இணைத்து கொண்டார்.உடன் வீரகேரளம்புதூர் சாமி உள்ளார்.




தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பகுத்தறிவு பகவன் தந்தை பெரியார் அவர்களின் 148 வது பிறந்தநாள் முன்னிட்டு சங்கரன் கோவில் மாவட்ட கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப்படத்திற்கு வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தலைமையில் முன்னாள் அமைச்சர் ச.தங்கவேலு முன்னிலையில் மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தி,சமூகநீதி நாள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.நிகழ்வில் கழக நிர்வாகிகள் கோ.சுப்பையா, சீனிவாசன்,செண்பகவிநாயகம், புனிதா,மகேஸ்வரி,சாகுல் ஹமீது, பெரியதுரை,பால்ராஜ்,பிரகாஷ், அந்தோணி சாமி,நாகூர்கனி, அன்புமணி,நெல்சன்,பிச்சையா, குருசாமி,அன்புமணி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.